1981 பிப்ரவரி 10]

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து அமைக்கப்பட்டுள்ள இந்த அண்ணா—காந்தி மணி மண்டபம் நல்லமுறையிலே இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா? அதை மாற்றியமைக்கக் கூடிய வகையில் நல்ல வருவாய் கிடைக்கக் கூடிய வகையில் இந்த மணி மண்டபத்தை தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கோ, அரசு அலுவல கங்களுக்கோ வாடகைக்கு விட அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அரசு இது குறித்துத் தேவையான முயற்சி எடுக்கும்.

ஜோலார்பேட்டையிலுள்ள மருந்தகம்

*வினா எண் 274 திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டையில் உள்ள மருந்தகத்தை மாற்றி மருத்துவமனை ஆக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார் பேட்டையில் உள்ள சிறிய டிஸ்பென்சரியை அரசு மருத்துவ மனையாக ஆக்கினால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்க ளுடைய தேவைகள் பூர்த்தியாகும் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து அந்தமருத்துவமனையை ஆரம்பிக்க ஆவனசெய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த டிஸ்பென்சரியை இப்போது ஒரு மருத்துவமனையாக ஆக்கக் கூடிய திட்டம் இல்லையென்றுதான் சொன்னேன் இந்த டிஸ்பென்சரிக்கு மானியமாக ஏதாவது கொடுக்கலாமா என்று கூடி கருதிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் ஒரு பஞ்சாயத்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

யூனியன் மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவோமானால் இன்னும் பல்வேறு மருந்தகங்கள் அவ்வாறு கேட்கும் நிலைமை ஏற்படும். ஆகவே அப்படி செய்ய முடியாது. பக்கத்திலே அங்கிருந்து 3 மைல் தூரத்திலே திருப்பத்தூரில் 120 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவ மனைக்கு செல்லக் கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், இந்த மருந்தகத்தை நாம் எடுத்துக் கொள்ளக் கூடிய திட்டம் எதுவும் இல்லாத காரணத்தால், இதற்கு வேறு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

புதுப்பாடி, திமிரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர்

*வினா எண் 275—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆற்காடு தொகுதி புதுப்பாடி மற்றும் திமிரி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களுக்கு சுற்றுச் சுவர்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—

(அ) தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினா எழாது.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவரவர்களே, டாக்டர்கள், நர்ஸ்கள் தங்குவதற்கு வசதிகள் இருந்தும் அந்த இடங்களுக்கு காம்பவுண்ட் சுவர் இல்லாததால், பாதுகாப்பு குறைவாக உள்ளது. ஆகவே அவற்றிற்கு காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனேகமாக எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இப்படிப்பட்ட காம்பவுண்ட் சுவர் இல்லாத குறை இருக்கிறது. அதைப் படிப்படியாகக் கட்டிக் கொண்டு வருகிறோம். இப்போது 47 ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கு காம்பவுன்ட் வசதி செய்வதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு, வேலைகள் முடிந்து விட்டன. இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து நான் சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். புதுப்பாடியில் உள்ள ஆரம்பச் சுகா தார நிலையத்தைப் பொறுத்த வரைல் ஏற்கனவே உத்தரவு போடப்பட்டுள்ளது.